*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*28 08 2025 THURSDAY 7.15 PM*
*ஆகாஷவாணி*

***தலைப்புச் செய்திகள்***

1. இந்தியா – பூட்டான் இடையே வேளாண் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.
2. கத்தார் நாட்டுடன் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பது குறித்து அந்நாட்டு வர்த்தக அமைச்சர் டாக்டர் Ahmed Bin Al Sayed -வுடன், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் விவாதித்தார்.
3. இந்தியாவை ஆக்கத்திறன் மையமாக உருவாக்கும் பிரதமரின் தொலைநோக்கு திட்டம் குறித்து தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று மெட்டா நிறுவன அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.
4. ஆஸ்திரேலியா, தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 500 பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குதி வரியை நீக்கியுள்ளது.
5. உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***இனி விரிவான செய்திகள்---***

<<<<<>>>>>>

இந்தியா – பூட்டான் இடையே வேளாண்மை மற்றும் வேளாண்சார் துறைகளில் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

பூட்டான் தலைநகர் திம்புவில் இந்தியாவின் வேளாண்துறை அமைச்சகத்தின் செயலர் திரு தேவேஷ் சதுர்வேதி , பூட்டான் நாட்டின் வேளாண்துறை செயலர் Thinley Namgyel, ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளதாகவும், இருதரப்பு உறவுகளின் மைல்கல்லாக இது விளங்குகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பு, நீண்டகால விவசாயம், கிராமப்புற மேம்பாடு ஆகியவற்றில் இருநாடுகளும் முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு இந்த ஒப்பந்தம் துணை புரியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இரண்டு நாள் பயணமாக இன்று மாலை அஸ்ஸாம் மாநிலத்திற்கு செல்கிறார்.

குவஹாத்தியில் ஆளுநர் மாளிகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பிரம்மபுத்திரா அலுவலக கட்டிடத்தையும் அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

பின்னர், இணையதள குற்றங்களுக்கான தேசிய தடயவியல் ஆய்வகத்தையும், ராணுவ கட்டமைப்புகளுக்கான புதிய வளர்ச்சித் திட்டங்களையும் திரு அமித் ஷா தொடங்கிவைக்க உள்ளார்.

அஸ்ஸாமில் தேர்தெடுக்கப்பட்ட 20 ஆயிரம் பஞ்சாயத்து தலைவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியிலும் அவர் கலந்துகொள்கிறார்.

இதில், 16 ஆயிரத்து 671 பேர் பிஜேபி சார்பிலும், ஆயிரத்து 500 பேர் இதர தேசிய ஜனநாயக கூட்டணியின் இதர கட்சிகள் சார்பிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நாளை மாலை அஸ்ஸாமின் முதல் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சராக திகழ்ந்த மறைந்த Golap Borbora -வின் பிறந்தநாள் நூற்றாண்டு கொண்டாட்டத்தையும் திரு அமித் ஷா தொடங்கிவைக்கிறார்.

<<<<<>>>>>>

கத்தார் நாட்டுடன் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பது குறித்து அந்நாட்டு வர்த்தக அமைச்சர் டாக்டர் *Ahmed Bin Al Sayed* -வுடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று ஆலோசனை நடத்தினார்.

புதுதில்லி வந்துள்ள கத்தார் நாட்டு அமைச்சரை சந்தித்த நிதியமைச்சர், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

இருநாடுகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நீடித்துவரும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

கடந்த பத்தாண்டுகளில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு இந்தியா மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் கத்தார் அமைச்சரிடம் அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, முதலீட்டுக்கான புதிய வாய்ப்புகள் மீது தாங்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக கத்தார் அமைச்சரும், அவருடன் வந்த தூதுக்குழுவினரும் தெரிவித்தனர்.

<<<<>>>>>

நாட்டை பொருளாதார வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டம் குறித்து மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் மெட்டா பன்னாட்டு நிறுவன அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டை ஆக்கத்திறன் மையமாக உருவாக்கி நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடுவது குறித்த பிரதமரின் திட்டம் குறித்தும் அந்நிறுவனத்தின் அதிகாரிகளுடன் தாம் ஆலோசித்ததாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

தமிழகத்தின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள மக்கள் பிரதமரின் வங்கிக்கணக்குத் திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

மதுரை, திருப்பத்தூர் மாவட்டங்களை சேர்ந்த பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் வங்கிக்கணக்குகளை தொடங்கி அரசின் நலத்திட்ட உதவிகளை நேரடியாக காலதாமதமின்றி பெற்று வருவதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் *Virar* -ல் கட்டிடம் இடிந்ததில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இந்த துயர சம்பவத்தில் அன்பு மிகுந்த குடும்ப உறுப்பினர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள அவர், காயமடைந்தோர் விரைந்து நலம் பெற பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்ட மலைப்பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி கோவில் புனித யாத்திரை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

திரிகுடா மலைப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட நிலச்சரிவில் 30-க்கும் மேற்பட்ட யாத்ரிகர்கள் இன்னுயிரை இழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதனையடுத்து, ஜம்மு காஷ்மீர் அரசு ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி கோவில் யாத்திரையை நிறுத்திவைக்கும் முடிவை எடுத்துள்ளது.

யாத்ரிகர்ககளின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிப்பதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி திருக்கோவில் வாரியம் விடுத்துள்ள அறிவிப்பில், அடுத்த அறிவிப்பு வரும்வரை பக்தர்கள் தங்கள் யாத்திரையை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

மூத்த அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாக கவனித்து பாதுகாப்பான யாத்திரையை மேற்கொள்ளும் வகையில், பாதிக்கப்பட்ட மலைப்பாதையை சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மலைப்பாதையில் ஆங்காங்கே சிக்கியுள்ள யாத்ரிகர்களை மீட்கும் பணியை மலைகிராம பகுதியை சேர்ந்த மக்கள் தாமாக முன்வந்து மேற்கொண்டிருப்பதாக எமது ஆகாஷ்வாணி ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

யாத்ரிகர்கள் தொடர்புகொள்வதற்கான தொலைபேசி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>>

ஆஸ்திரேலியா தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நோக்கில் *500* பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குதி வரியை நீக்குவதாக அறிவித்துள்ளது. கான்பராவில் இதனை அறிவித்த அந்நாட்டின் வர்த்தகத்துறை அமைச்சர் திரு *Don Farrell*, டயர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், கண்ணாடி கோப்பைகள் போன்றவற்றிற்கு சிறிய அளவில் தேவையற்ற வரிகள் விதிக்கப்பட்டிருந்ததாகவும், இதனை முற்றிலுமாக நீக்குவதாகவும் தெரிவித்தார்.

நிதியமைச்சர் திரு *Jim Chalmers*, சிறிய வகை வரிகளால் குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கில் இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

டயர்களுக்கு விதிக்கப்படும் வரியால் ஆண்டுக்கு *80* ஆயிரம் ஆஸ்திரேலியா டாலர்கள் மட்டுமே கிடைத்து வந்ததாகவும், இந்த வரியை முற்றிலுமாக நீக்குவதால் *32* மில்லியன் டாலர் வர்த்தகம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

காய்கறிகள், குளிர்சாதன பெட்டிகள், ரப்பர் போன்றவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த வரிகளும் நீக்கப்படுவதாக அவர் கூறினார்.

அண்மையில், ஆஸ்திரேலியா அரசின் பொருளாதார சீர்திருத்த வட்டமேசை கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாகவும் *Jim Chalmers* தெரிவித்தார்.

<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பாரிசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், *21-19, 21-15* என்ற செட் கணக்கில், சீனாவின் *Zhi Yi Wang* -ஐ வென்றார்.

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்ட்டோ இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு வர்தன் – தென்கொரியாவின் *Yong Han* இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, *7-6, 6-1* என்ற செட் கணக்கில், சீனாவின் *Yuquan Jin – Zekai Li* இணையை வென்றது.

-------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில அவர் *6-3, 6-1* என்ற செட் கணக்கில, செக் குடியரசின் *Jan Klimas* -ஐ வென்றார்.

-------------

காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ***Harjinder Kaur*** ***வெண்கலப்பதக்கம்*** வென்றார்.

***-------------------***

***தேசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் அனாகத் சிங் பட்டம் வென்றார்.***

*<<<<<END>>>>>>*